முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1210

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2023, சனிக்கிழமை**

1. கருணைவடிவாக வந்த ஞானகுருவே
   கந்தவேலன் என் அவதாரமான மாதவராஜனே
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்தருளுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 07 ம் நாள் 21.01.2023, சனிக்கிழமை)
   வரமென உன் சக்தி உலகமெங்கும்
   வள்ளல் தன்மையாக மக்களிடை நிரம்பி
3. நிரம்பி தர்மமாக ஜீவகாருண்யமாக
   நிலவுலகமெங்கும் வியாபித்து அருள் புரிய
   கலகமிடர் இல்லாத ஞான பூமியாக
   கலியுகம் மாற்றம் கண்டு இனிதே ஞான யுகம்
4. யுகமாற்றம் அரங்கன் உன் அவதாரத்தாலும்
   உயர்வான உன் தொண்டர் படைகளாலும் இனிதே நடந்தேறும்
   வகையான ஞானவான்கள் படை இன்னும் பெருகி
   வையகமெங்கும் தர்மமும் ஜீவகாருண்யமும் ஐயமற மிகுதியாகி
5. அரங்கன் சேவையாலே அனைத்து திக்கிலும் தர்மபலம் கூடி
   சிந்தைமுழுக்க தயவுநெறி மக்களிடை நிரம்பி
   சித்திகண்டு அவரவரும் அரங்கன் உன்வழி இத்தரையில் ஞானிகளாவர்
   இணைந்து இவர்கள் மூலம் ஞானத்தலைமை பெருகி
6. பெருகியே ஞான ஆட்சிக்காலம்
   பிசகின்றி அரங்கன் அவதாரத்தின் பயனாக
   பேருலகம் கண்டு சிறக்க நேரும்
   பிரபஞ்சமே அரங்கன் அவதாரத்தால் மகிழ நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–